## சுருக்கம்

வனம் – பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் – 2018–2019 ஆம் ஆண்டிற்கான வன ஒருங்கிணைப்புத் திட்டம் பகுதி–1 – திட்டம் நடைமுறைப்படுத்துதல் – செலவின ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம். 14) துறை**

அரசாணை (நிலை) எண்.52

நாள்: 28.05.2019
விகாரி– வைகாசி–14
திருவள்ளுவர் ஆண்டு–2050

படிக்க.:

முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கடிதம் ந.க. எண்.594/2018/டிஎஸ்4, நாள் 31.07.2018.

---

**ஆணை:–**

மேலே படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கடிதத்தில், பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், 2018–2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் வன ஒருங்கிணைப்பு பகுதி–1 திட்டத்தின் கீழ் எல்லைக் கற்குட்டுகள் அமைக்கும் பணிக்காக ரூ.1000/– மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ், 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் வன ஒருங்கிணைப்பு பகுதி–I திட்டத்தின் கீழ், பின்வரும் வனமண்டலங்களில் உள்ள காப்புக்காடு எல்லைகளை வரையறுக்கவும் ஆக்கிரமிப்புகளின்றி பாதுகாக்கவும் மீதமுள்ள 74602 எல்லைக் கற்குட்டுகள் (கல்குட்டு ஒன்றிற்கு ரூ.2700/– வீதம்) அமைக்கும் பணிக்காக ரூ.2014.254 இலட்சம் தொகையை ஒப்பளிப்பு செய்யுமாறும், இதற்கான மதிப்பீடுகள் 2018–2019–க்கான பொதுப்பணித்துறை விலைவிகிதத்தின்படி ஒப்பளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து காப்புகாடுகள் மற்றும் வன நிலங்களில் தற்போதைய நிலையில், அனைத்து வனப்பாதுகாவலர்கள் மற்றும் தலைமை வனப்பாதுகாவலர்கள் ஆகியவர்களிடமிருந்து, வனத்தை பாதுகாக்க மேலும் 74602 எல்லை கற்குட்டுகள் தேவை என அறிக்கை பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில், 74602 கற்குட்டுகள் கட்டுவதற்கான பிரேரணை தயார் செய்யப்பட்டுள்ளது எனவும், மேற்படி பிரேரணை மண்டலவாரியாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அந்தந்த மண்டலங்களின் கீழ் இயங்கும் கோட்டங்களுக்கு, தேவைக்கேற்ப (முக்கியத்துவம் வாய்ந்த பணிக்கு முன்னுரிமையளித்து) கற்குட்டுகள் கட்டும் பணி பகிர்ந்தளிக்கப்பட்டு அந்தந்த கோட்டங்களின் கீழ்

உள்ள காப்புக்காடுகளின் எல்லைகளில் கட்டப்படும் எனவும் இக்கருத்துருவின் மீது ஆணை வழங்குமாறும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| வ.எண். | மண்டலம் | கற்குட்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | திண்டுக்கல் | 6590 |
| 2. | திருநெல்வேலி | 1617 |
| 3. | திருச்சி | 700 |
| 4. | விருதுநகர் | 9000 |
| 5. | மதுரை | 13109 |
| 6. | தருமபுரி | 5070 |
| 7. | சென்னை | 3221 |
| 8. | சேலம் | 6514 |
| 9. | கோவை | 2450 |
| 10. | வேலூர் | 9608 |
| 11. | விழுப்புரம் | 13641 |
| 12. | சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், ஈரோடு | 1220 |
| 13. | ஆனைமலை புலிகள் காப்பகம், பொள்ளாச்சி | 1350 |
| 14. | களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகம், திருநெல்வேலி | 512 |
| | மொத்தம் | 74602 |

2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்ததில் பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், 2019–2020 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் வன ஒருங்கிணைப்பு பகுதி–I திட்டத்தில் ஒரு கல்குட்டிற்கு ரூ.2,420/– (ரூபாய் இரண்டாயிரத்து நானூற்று இருபது மட்டும்) என நிர்ணயித்து ரூ.55.00 லட்சம் (ரூபாய் ஐம்பத்து ஐந்து லட்சம் மட்டும்) தொகையை ஒப்பளிப்பு செய்தும், கல்குட்டுகள் நிறுவப்பட வேண்டிய இடங்களை தேவையை பொருத்து முதன்மை தலைமை வனப்பாதுகாவலரே முடிவு செய்யுமாறும் மேலும், மேற்படி செலவினத்தை மேற்கொள்ள முதன்மை தலைமை வனப்பாதுகாவலருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணை வெளியிடப்படுகிறது. இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தினை பெற்று அரசுக்கு தெரிவிக்கும்படி முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை, கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4406 காடு வளர்ப்பு வன விலங்குகள் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு – 01 காடு வளர்ப்பு – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – JD காட்டுப் பகுதிகளை ஒருங்கிணைத்தல் – 16 பெரும் பணிகள்

(த.தொ.கு. 4406–01–800– JD –41601)"

(IFHRMS DPC – 4406-01-800-JD-41601)

4. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.19574 நாள்02.05.2019–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்,
சென்னை–600 015.
மாநில கணக்காயர்,
சென்னை–18.
சம்பள கணக்கு அலுவலர்,
சென்னை–35.
<u>நகல்</u>
நிதித் [( AHD&F), துறை, சென்னை–9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை,
சென்னை–9.
சுற்றுச்சூழல் மற்றும் வனத்(வ.7) துறை,
சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்